# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2239/51 - 2021 අගෝස්තු මස 06 වැනි සිකුරාදා - 2021.08.06

*2239/51 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 19/78*(V)

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம்**

13 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதியமைச்சர் மொஹமட் அலி சப்ரி ஆகிய நான், இக்கட்டளை மூலம்-*

(அ) அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தின் ஆள்புல எல்லைகளின் மீதும் அதன் ஆள்புல நீர்ப்பரப்புக்களின் மீதும் ; அத்துடன்

(ஆ) 2017, செத்தெம்பர் 25 ஆந் திகதிய 2038/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவாறு நில மற்றும் நீர்ப் பிரதேச எல்லைகளின் மீதும்

கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கு அம்பாந்தோட்டை நீதிமுறை வலயத்தில் அமர்கின்ற மேல் நீதிமன்ற நீதிபதிக்குத் தத்துவமளிக்கின்றேன்.

**மொஹமட் அலி சப்ரி** (சனாதிபதி சட்டத்தரணி),
நீதி அமைச்சர்.

கொழும்பு,
2021, யூலை 26.

08-293


1A - G 34792 - 70 (2021/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*